செ.வெ.எண்:43 நாள்:22.06.2021

# கரூர் மாவட்டம்

## பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் கொரோனா பெருந்தொற்றின் பரவலை கட்டுப்படுத்த முழு ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருவதால் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் நேரடியாக அவர்களுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் அரிசி, பருப்பு மற்றும் மாதம் 10 முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, கரூர் மாவட்டத்தில் சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு மே 2021 மற்றும் ஜீன்2021 மாதத்திற்கு 5300 கிராம் அரிசி, 2080 கிராம் துவரம் பருப்பு மற்றும் 20 முட்டைகளும் வழங்கப்பட்டு வருகிறது. 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 7950 கிராம் அரிசி, 2482 துவரம் பருப்பு மற்றும் 20 முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. மாணவ / மாணவியர்களின் பெற்றோர்கள் சம்மந்தப்பட்ட பள்ளியில் சத்துணவு மையங்களில் நேரில் சென்று உரிய உலர் உணவு பொருட்களை தவறாமல் பெற்றுக் கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.